பக்கங்கள் 18 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 06 ஞாயிற்றுக்கிழமை 19.05.2024 அதிர்வு 293


## 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற காலநிலையையடுத்து 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித் 04▶





# வழக்காளியுடன் சுமுகத் தீர்வுக்கு இணக்கப் பேச்சு நடத்துங்கள்!


## தமிழரசு மத்திய குழு வழிகாட்டல்

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்குத் தடை விதிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்த வழக்காளியின் சட்டத்தரணியுடன் நேரடியாக பேசி நீதிமன்றத்துக்கு வெளியிலேயே ஓர் இணக்கத் தீர்வைக் காணவும், அதை நீதிமன்றத்தில் முன்வைத்து வழக்குக்கு விரைந்து முடிவு கட்டவும் நடவடிக்கை எடுக்கும்படி இன்று வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழிகாட்டுதல் விடுத்தது. 04▶

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

## மூன்று பேர் படுகொலை




குருநாகலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நபர் ஒருவரால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் இன்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

42 வயதுடைய நபர் ஒருவரால் 80 வயதுடைய வயோதிபர், 77 வயதுடைய அவரது மனைவி மற்றும் 42 வயதுடைய அவர்களது மகன் ஆகியோர் அவர்களது வீட்டில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குருநாகல் பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான 04▶




# கல்முனை தமிழர் பிரதேசத்தில் ஒரு இஞ்சி அளவு நிலம் கூட விட்டுக் கொடுக்க முடியாது!

## ஹரீஸின் கருத்துக்குக் கோடீஸ்வரன் பதிலடி

(வி.ரி.சகாதேவராஜா)

“கல்முனை நகரத்தை 4ஆக அல்லது 48 ஆகப் பிரியுங்கள். ஆனால், கல்முனை தமிழர் பிரதேசத்தில் ஒரு இஞ்சி அளவு நிலம் கூட விட்டுக் கொடுக்க முடியாது. கல்முனை என்பது தமிழர்களின் தாயகம்.”

– இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தருமான கவீந்திரன் கோடீஸ்வரன் ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

குறித்த ஊடகச் சந்திப்பு 04▶

# ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஜூன் முதல் அனல் கக்கும் கூட்டங்கள்!

மே தினக் கூட்டத்துக்குப் பிறகு, ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஆரம்பகட்ட கூட்டங்களை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மிகவும் பிரமாண்டமாக நடத்துவதற்குப் பிரதான அரசியல் கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் பிரதான அரசியல் கட்சிகள் பிரமாணடமாக நடத்தி இருந்தன. பெருமளவான மக்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்த பிரசாரக் கூட்டங்கள் ஜூன் மாதம் முதல் நடத்தப் படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் மக்கள் சந்திப்பு, ஜூன் 8 ஆம் திகதி மாத்தறையில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்குரிய உத்தியோகபூர்வ பிரசாரக் கூட்டமாக இது அமையும் எனக் கருதப்படுகின்றது.



ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பனவும் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன. அதேவேளை, உத்தர லங்கா சபாகயவின் ஜனாதிபதி வேட்பாளரும் ஜூன் மாதமே பெயரிடப்படவுள்ளார்.



# ஜனாதிபதியின் வடக்குக்கான விஜயம் குறித்த முன்னாயத்த கலந்துரையாடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு மாகாணத்துக்கான விஜயம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடை பெற்றது.

பாதுகாப்புப் பிரிவினர், பொலிஸார், மாவட்ட அரச அதிபர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியால் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள், திட்டங்களுக்குப் பொறுப்பான துறைசார் அதிகாரிகளின் கடமைகள், பாதுகாப்பு நடைமுறைகள், நிகழ்ச்சி நிரல் திட்ட மிடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டன.





# EVEREST
## FURNITURE

HIGH QUALITY PRODUCTS





(416) 332-0721

everestfurniture.ca

EverestFurnitureInc

80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# ஒக்டோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல்?

## ரணிலை ஆதரிக்க மொட்டுக் கட்சி தீர்மானம்

ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் நடத்துவதற்கு அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஆதரவளிக்கும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பரந்துபட்ட கூட்டணியின் கீழ் பொது வேட்பாளராகப் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அரசின் உயர்மட்டத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்று பல்வேறு தகவல்கள் பகிரப்பட்டன. மே மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் அந்தத் தகவல்களில் கூறப்பட்டன. இந்தத் தகவல்களுக்கு ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் பதிலளிக்கையில், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டால் எவ்வாறு சர்வதேச நாணய நிதியத்துடனான நாட்டின்பொருளாதாரநடவடிக்கைகளை முன்னெடுப்பது எனக் கேள்வியை முப்பியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தொடர்பில் அரசின் முக்கியஸ்தர் ஒருவர் தகவல் கூறினார். இதன் பிரகாரம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தலை

(07ஆம் பக்கம் பார்க்க)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வழக்காளியுடன்...

இன்று காலை 10:30 மணியளவில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கூடிய கட்சியின் மத்திய குழு பிற்பகல் 3 மணிக்கு மதிய இடைவேளைக்காக இடைநிறுத்தும் வரை கட்சிக்கு எதிரான வழக்கு விடயம் குறித்தே விவாதித்தது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் கோரிக்கை மதிய போசன இடைவேளைக்குப் பின்னரே ஆராயப்பட இருந்தது.

வழக்கு விடயம் நீண்ட வாத பிரதிவாதங்களின் பின்னர் முடிவுக்கு வந்தது. அது தொடர்பான தீர்மான வாசகங்களை சுமந்திரனே வரையறுத்துக் கொடுத்தார்.

கட்சியின் தலைவர் தெரிவு உட்பட அனைத்தையும் மீள ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம், எல்லா விடயங்களையும் யாப்புக்கு அமையவே கையாள்வோம் என்பன போன்ற வாக்குறுதிகளை வழக்காளியின் சட்டத்தரணியுடன் உரையாடி அளிப்பதன் மூலம் வழக்கை நீதிமன்றத்தில் விரைந்து சுமுகமாக முடிவுறுத்த முயற்சிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயத்தை சுமந்திரனே ஏனைய சட்டத்தரணிகளையும் இணைத்துக் கொண்டு முன்னெடுக்க வேண்டும் என இன்று நண்பகலை ஒட்டிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று அறியவந்தது.

### மூன்று பேர்...

முறையில் பயணித்த ஒருவரைப் பொலிஸார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 3 இலட்சம் ரூபா பணம் மற்றும் தங்கப் நகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி சந்தேகநபரைக் கைது செய்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### 7 மாவட்டங்க...

துள்ளது.

இன்று அதிகாலை 3 மணி முதல் நாளை அதிகாலை 3 மணி வரை அமுலாகும் வகையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

அதன்படி, பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச செயலகங்களுக்கு 2 ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தின் மேலும் 4 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களின் 33 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர மேலும் கூறினார்.

### கல்முனை...

அக்கரைப்பற்றில் நடைபெற்றது. அச்சமயம் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் க.சிவலிங்கம், தமிழரசுக் கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச தலைவர் கே.ஜெகநாதன் (குமார்) ஆகியோரும் உடனிருந்தனர்.

அங்கு முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"சமூக வலைத்தளங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸின் கருத்தை அவதானித்தேன். அவரது கருத்து ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களை வேதனைப்படுத்துவதாக இருக்கின்றது.

குறிப்பாக 56 ஆவது நாளாக மழையிலும் வெயிலிலும் கல்முனையில் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் ஹரீஸின் கருத்து இருக்கின்றது. அந்த எதிர்வினையான கருத்துக்குப் பதிலடி கொடுக்க எனக்குக் கடமை இருக்கின்றது.

இந்தப் போராட்டத்தின் பின்னால் அரசியல் பின்னணி இருக்கின்றது எனக் ஹரீஸ் கூறுகின்றார். இது அப்பட்டமான பொய். உணர்வுள்ள அனைத்து மக்களும் இணைந்து நிர்வாக அதிகார பயங்கர வாதத்துக்கு எதிராக போராட்டத்தை நடத்துகின்றனர். 1993 இல் வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்ட பிரதேச செயலகத்திற்கான பூரண அதிகாரங்களை அவர்கள் கேட்கிறார்கள்.

56 நாட்களாக இந்தப் போராட்டம் நடக்கின்றது. அம்பாறை மாவட்டத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் அரச அதிபர் ஆவார். அவர் இன்னும் அங்கு வந்து அந்த மக்களின் உணர்வலைகளைக்கருத்தைப்பெறமுயற்சிக்கவில்லை. இது மிகவும் கவலையான விடயம். ஜனாதிபதியிடம் நாங்கள் நேரடியாக இந்த விடயத்தைக் கூறியிருக்கின்றோம். ஓர் அரச அதிபர் பக்கச்சார்பற்றவராக இருக்க வேண்டும். அவர் அரச நிர்வாகி. ஓரினத்துக்கு மாத்திரம் கடமைச் செய்ய அவரை ஜனாதிபதி நியமிக்கவில்லை.

ஓர் இனத்துக்கு பாரபட்சம் காட்டி இன்னொரு இனத்தை அரவணைத்துச் செல்வது உலகத்தில் எங்கும் நடக்காத விடயம். அது இங்கு நடக்கின்றது.

கல்முனையை நகரை நான்காகப் பிரிக்கப் போவதாகக் ஹரீஸ் கூறுகின்றார். அது அவரது சொந்தக் கருத்து. அவர் நான்காக அல்ல 48 ஆகப் பிரிக்கட்டும். எத்தனை பிரிப்பு வந்தாலும் எமது கல்முனை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள 29 கிராம சேவை பிரிவுகளிலே எந்த வொரு இஞ்சி நிலத்தைக் கூட விட்டுக் கொடுக்க முடியாது. கல்முனை என்பது தமிழர்களின் தாயகம்.

அவர் கல்முனைக்குப் பிதா, தான் என்று கூறுகின்றார். ஹரீஸ் கல்முனைக்குப் பிதாவாக ஒருபோதும் இருக்க முடியாது. தேவையானால் அவர் பிறந்த கல்முனைக்குடிக்குப் பிதாவாக இருக்கட்டும். அல்லது சாய்ந்தமருதுக்கு, மருதமுனைக்கு அவர் பிதாவாக இருக்கட்டும்.


ஆனால், எங்களுக்கு அவர் பிதாவாக இருக்க முடியாது. கல்முனை நகரம் தொண்ணூறு வீதம் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற தமிழர் தாயகம். அதைத் துண்டாடி பிரித்துக் கையாள்வதற்கான சதித் திட்டமே இதுவாகும்.

இதே செயற்பாட்டில் முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா ஈடுபட்டிருந்தார். இப்போது ஹரீஸ் ஈடுபடுகின்றார் .

இந்தத் துண்டாடும் கோஷத்தை முன்வைத்து தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முயல்கின்றார்.

ஹரீஸ், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைக் குழப்ப முனைகின்றார். ஒருபோதும் அவரால் முடியாது. அது பகல் கனவு.

இந்தப் பிரிவுகளை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழ் பிரதேசங்களில் உள்ள அனைத்து வளங்களையும் மக்களையும் உள்ளடக்கிய தனியான பூரண அதிகாரம் மிக்க பிரதேச செயலகம் ஒன்றே அந்த மக்களின் எதிர்பார்ப்பாகும். அதனை நிறைவேற்றியே தீருவோம்." – என்றார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் எதேச்சாதிகாரம்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்காக கடந்த ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் இன்னும் சட்ட ரீதியாக நிராகரிக்கப்படவில்லை. அந்தத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், தேர்தல் நடவடிக்கைகளும், அது தொடர்பான சட்டங்களும் இன்னும் நீடிக்கின்றன - நிலுவையில் இருக்கின்றன - என்றே அர்த்தம்.

இந்தப் பின்புலத்தில், இன்னும் அறிவிக்கப்படாத ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் காய் நகர்த்தல் தேர்தல் ஆணையகத்தின் கடும் ஆட்சேபத்துக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகி இருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேச திட்டப்படி -

ஒவ்வொரு உள்ளூராட்சி சபை பிராந்தியத்துக்கும் 'அவசர அபிவிருத்தி வேலைகளை' மேற்கொள்வதற்காக ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சபைகளுக்கு ஏற்ப மாறுபாடுகள் உண்டு. இதற்காக மொத்தம் 1,400 கோடி ரூபா இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியை எந்தெந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வது என்பது தொடக்கம், அந்த நிதி சரியாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பது வரையான நடவடிக்கைகளை கண்காணித்து, மேற்பார்வை செய்து, வழிநடத்துவதற்கு ஒவ்வொரு உள்ளூராட்சி சபைப் பகுதிக்கும் 'உள்ளூர் சமூக ஆலோசனை குழுக்களை' அமைக்கும்படி அரசு வழிகாட்டுதல் வழங்கியிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் அளித்துள்ளது.

ஆனால் உள்ளூராட்சி சபை தேர்தல் நிலுவையில் இருக்கையில் இப்படி உள்ளூராட்சி மட்டத்தில் ஆலோசனை குழுக்கள் என்ற பெயரில் சிலரை நியமித்து, அவர்கள் மூலம் அரச நிதி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தேர்தல் நடைமுறை விதிகளுக்கு முற்றிலும் முரணானது என தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதி செயலகத்துக்கு உத்தியோக பூர்வமாக ஆட்சேபனைக் கடிதம் எழுதி இருக்கின்றார்.

மேற்படி நிதித் திட்டங்களை மட்டுமல்லாமல், 'உறுமய' காணி விநியோகத் திட்டம், நகரப்புறங்களில் வீடுகள் விநியோகம், மலையக அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், விவசாய நவீனமயமாக்கல் திட்டங்கள் மற்றும் இலவச அரிசி விநியோகம் போன்றவற்றை ஒவ்வொரு உள்ளூராட்சி சபைப் பிரிவிலும் நிறுவப்படும் சமூக ஆலோசனைக் குழு மேற்பார்வையிடும் எனவும் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் தேர்தல் ஆணைய தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஆட்சேபக் கடிதம் எழுதியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் அனைத்திலும் சமூக ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மாகாண ஆளுநர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கை தொடர்பிலேயே தேர்தல்கள் ஆணையத் தலைவர் இக்கடிதத்தை எழுதியுள்ளார்.

இந்த ஆலோசனைக் குழுக்களின் நடவடிக்கைகள் மூலம் உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர்கள் மக்கள் கவனத்தை ஈர்த்து, அவர்கள் அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆதாயங்களை ஊக்குவிப்பதும், தேர்தல் சட்டங்களை மீறுவதும் தவிர்க்க முடியாதது என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் இன்னும் செல்லுபடியாகும் என்பதாலும், அதற்கான தேர்தல் சட்டங்கள் நடைமுறையில் உள்ளமையாலும், இந்தக் குழுக்களின் ஊடாக வேட்பாளர்களால் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு அனுமதிக்க முடியாது என தேர்தல் ஆணைய தலைவர் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ஜனாதிபதி அலுவலகத்தின் மூத்தஅதிகாரிஒருவர், முன்மொழியப்பட்ட மேற்படி குழுக்களை அமைக்கும் நடவடிக்கையை நிறுத்தும் எண்ணம் ஏதும் இல்லை என்று கூறினார்.

ஆக, தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையையும், ஆட்சேபனையையும் மீறி, வழமை போல தனது எதேச்சாதிகார நடவடிக்கையை ரணிலின் அதிகார கட்டமைப்பு முன்னெடுக்க போகின்றது என்பதுதான் நிலைமை.

# கால்பந்தாட்ட திருவிழாவில் வடக்கு, கிழக்கு சிறார்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் சகல பிரதேசங்களிலும் கால்பந்தாட்டத் துறையை அபிவிருத்தி செய்து திறமைசாலிகளை தெரிவு செய்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பங்கேற்கச் செய்யும் நோக்குடன் கால்பந்தாட்டத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டது.

எமது நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 10 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய கால்பந்தாட்ட திருவிழா அண்மையில் கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



றினோன் கால்பந்தாட்ட அக்டமி, இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து மல்டி லெக் நிறுவன அனுசரணையில் இந்தக் கால்பந்தாட்ட திருவிழாவை ஒழுங்கு செய்திருந்தது.

இந்தத் திருவிழாவில் நாட்டின் வட கிழக்கு மாகாணங்கள் உட்பட நாலா புறமுமிருந்து 1500 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்தக் கால்பந்தாட்ட திருவிழாவில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒக்டோபர்....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், பெரும்பாலும் ஒக்டோபர் 5ஆம் திகதி தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசமைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான சட்ட விதிகளின் பிரகாரம் 2024ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் செப்டெம்பர் 17ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கு இடைப்பட்ட சனிக்கிழமை ஒன்றில் நடத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையிலேயே ஒக்டோபர் மாதத்தில் முதல் வாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பொதுஜன பெரமுனவில் சாதகமான பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக் குழு ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கின்ற நிலையில், அந்தக் கட்சியின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் சம்மேளனத்தினர் ஜனாதிபதி ரணிலை நேரில் சந்தித்து ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனையுடன் இடம்பெற்ற ஒன்றாகும். மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியும் பல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுகளை முன்னெடுத்து இணக்கப்பாடுகளை எட்டியுள்ளது. அத்துடன் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# திருகோணமலையில் பல நிகழ்வுகள் கிழக்கு மாகாண ஆளுநர் பங்கேற்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலையில் பல நிகழ்வுகளில் இன்று கலந்து கொண்டார்.

திருகோணமலை துறைமுக உள்ளக வீதியில் புதிய நடை பாதை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. வசதியீனம் காரணமாக நீண்ட நாள் நோயாளிகளாக உள்ளவர்களுக்கு வைத்திய உதவிப் பணம் வழங்கப்பட்டது.

வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட பாடப்புத்தகங்கள் தவிர மேலதிக பயிற்சிப் புத்தகங்கள் வழங்கி வைத்தார்.

நூலகங்களுக்கு நூல்கள் வழங்கல், வலது குறைந் தோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கல் போன்ற நிகழ்வுக ளிலும் கலந்து கொண்டார்.

















# செம்பியன் செல்வன் எனும் இராஜகோபால் ஈழத்தின் தலை சிறந்த சிறுகதை சிற்பி!

**(ஈழத்து நவீன இலக்கிய உலகின் ஈடிணையற்ற இலக்கியவாதியாகத் திகழ்ந்த நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வனின் நினைவு தினம் நாளை)**

**■ ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அத்தியடியிலும் , நீராவியடியிலும் என் இலக்கிய ஆசான் செம்பியன் செல்வனுடன் அளவளாவிய தருணங்கள் ஆயிரம். ஈழத்தின் பன்முக ஆளுமை கொண்ட எழுத்துக்கலைஞன் செம்பியன் செல்வன் எனது நான்காவது கவிதை தொகுதியான 1989 இல் வெளியான “உறக்கந்தேடும் உலகிற்காய்” முன்னுரையையும் எழுதியுள்ளார்.

நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையைப் பதித்தவர் செம்பியன் செல்வன். ஈழத்தின் பன்முக ஆளுமை கொண்ட எழுத்துக்கலைஞன் செம்பியன் செல்வன் ஆவார். இராஜகோபால் என்ற இயற்பெயருடைய செம்பியன் செல்வன் (ஜனவரி 1, 1943 – மே 20, 2005) ஈழத்தின் குறிப்பிடத்தக்க புகழ்பெற்ற எழுத்தாளர்.

பல்கலைக்கழக மறுமலர்ச்சி

செம்பியன் செல்வன் இளம் வயதிலேயே சிறந்த வாசிப்பாளனாக இருந்தார். அத்துடன் பல்வேறு இலக்கிய சஞ்சிகைகள் பெற்று நிறைந்த வாசிப்பாளனானார். செம்பியன் செல்வன் 1960 ஆம் ஆண்டுகளில் பேராதனை பல்கலைக்கழகக் கழகத்துக்கு அனுமதி பெற்று புவியியல் சிறப்புக்கலைப் பட்டதாரியானார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்டவர்களில் செம்பியன் முக்கிய மானவர். இந்தப் பல்கலைக்கழகச் சூழலில் ஆற்றல்மிக்க எழுத்தாளர் கூட்டம் செம்பியன் செல்வனின் நண்பர்களாகவும் இருந்துள்ளனர்.

ஈழத்தமிழ் இலக்கிய உலகின் புத்தெழுச்சிக் காலமாகத் திகழ்ந்த 1960களுக்குப் பிந்திய காலத்தில் ஒரு முக்கியமான படைப்பாளியாகத் திகழ்ந்தவர் செம்பியன் செல்வன். சிறுகதை, குறுங்கதை, உருவகக் கதை, நாவல், இதழியல், அரங்கியல், ஆய்வு, உரைச்சித்திரம் எனப் பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளியாகவும் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் திகழ்ந்தவர் இவர்.



பட்டப் படிப்பிறக்காக 1960களில் பேராதனை பல்கலைக்கழகத்துக்குள் இவருடன், செங்கை ஆழியான், துருவன், அங்கையன் கைலாசநாதன், செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், கலாபரமேஸ்வரன், நவசோதி, குந்தவை ஆகியோர் இணைந்து பல்கலை வெளியீடு என்னும் அமைப்பை உருவாக்கி ஆண்டுக்கொரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம், என்னும் நான்கு தொகுதிகளையும் வெளியிட்டனர். இவர்கள் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் ஒன்பது சிறுகதைகளைத் தாங்கிய ‘காலத்தின் குரல்கள்’ எனும் தொகுப்பு மார்ச் 1961 ஆம் ஆண்டு வெளிவந்தது.

இதில் ‘புதிய பரம்பரையின் துருவ நட்சத்திரம்’ என்னும் அவரது சிறுகதை பிரசுரமாகியது. 1962 ஜனவரியில் பன்னிரண்டு சிறுகதைகள் தாங்கிய ‘கதைப்பூங்கா’ என்னும் தொகுப்பு வெளிவந்தது. இதில்

தொடர்ச்சி▼

# செம்பியன் செல்வன் எனும் இராஜகோபால் ஈழத்தின் தலை சிறந்த சிறுகதை சிற்பி!

தொடர்ச்சி▲

'பாதிமலர்' எனும் அவ ரது சிறுகதை பிரசுரமாகியது. மேலும் 1963ஆம் ஆண்டு ஜனவரியில் பத்து சிறு கதைகளைத் தாங்கி வெளிவந்த 'விண்ணும் மண்ணும் செம்பியன் செல்வனால் தொகுக்கப்பட்டது.

**ஈழநாடு வளர்த்த சிறுகதைச் சிற்பி**

அறுபதுகளில் ஒரு சிறுகதைப் படைப்பாளியாகவே எழுத்துப் பிரவேசம் செய்த இவருடைய பன்முக இலக்கியச் செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெறுவது இவரது சிறுகதைகளே என்பது இலக்கிய உலகின் திடமான கணிப்பாகும்.

செம்பியன் செல்வன் ஈழத்துப் படைப்பாளிகளைப் பற்றிய 'ஈழத்துச் சிறுகதை மணிகள்' என்னும் நூலை எழுதியுள்ளார். இவரது 'சர்ப்பவியூகம்' சிறுகதைத் தொகுதி இலங்கை சாஹித்யவிருது பெற்றது. கலைக் கழகம் நடத்திய நாடகப் போட்டியில் தொடர்ந்து 4 வருடங்கள் முதல் பரிசு பெற்றவர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகை தனது வெள்ளிவிழா பொருட்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை பரிசு பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஈழநாடு பத்திரிகை தனது பத்தாண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய சிறுகதைப் போட்டியிலும், கலைச்செல்வி சிறுகதைப் போட்டியிலும் முதற் பரிசு பெற்றுள்ள செம்பியன் செல்வனின் 'சர்ப்பவியூகம்' சிறுகதைத் தொகுதி 2003 ஆம் ஆண்டுக்கான அரச சாகித்திய விருதைப் பெற்றுள்ளது. 'அமைதியின் இறகுகள்' இவருடைய இன்னொரு சிறுகதை நூல்.

குறுங்கதைகள், உருவகக் கதைகள் ஆகியவற்றிலும் திறமை காட்டியவர் செம்பியன் செல்வன். இவரின் 'குறுங்கதைகள் நூறு' என்னும் தொகுதி வெளி வந்திருக்கிறது. உருவகக் கதைகள் தொகுக்கப்பட்ட நிலையில் போர்க் காலச் சூழலால் அழித்து போயுள்ளது என்பதும் உண்மையே.

**நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு**

செம்பியன் செல்வன் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது. இதற்கு இவரின் நாடக பிரதியாக்கங்களுக்கு கிடைத்த பரிசில்கள் கட்டியம் கூறும். 1966 - 1967 ஆம் ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் பிரதிப் படங்களில் 'இந்தி ரஜித்', 'இருளில் எழும் பெருமூச்சுக்கள்' பரிசுகளைப் பெற்றன. 1975, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கலாசாரப் பேரவையின் நாடக எழுத்துப் பிரதிப் படங்களில் 'சின்ன மீன்கள்', 'எரியும் பிரச்சினைகள் முதல் பரிசுகளைப் பெற்றன.

செம்பியன் செல்வனின் 'மூன்று முழு நிலவுகள்' என்னும் நாடக நூல் 1967 ஆம் ஆண்டு வெளிவந்தது. செம்பியனின் மூன்று முழு நிலவுகள் நாடகம் மகத்தான வெற்றி பெற்றதுடன், மேடைக்கும், வாசினைக்கும் ஒப்பவே உயிரூட்டும் உரைநடையும், நாடக மறை கவர்ச்சியும் கொண்ட நல்ல நாடகம் என்று பலராலும் பாராட்டை பெற்றது.

ஈழநாடு தனது 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய இலக்கியப் போட்டியில் செம்பியன் செல்வனின் 'விடிய இன்று நேரமிருக்கு' என்னும் ஓரங்க நாடகம் முதலில் இடம்பெற்றது. இந்த நாடகத்தில் யாழ்ப்பாணத்துச் சமூகம் ஒன்றை நன்கு படம் பிடித்துக்காட்டுகிறார். ஏழைக் குடும்பமொன்றின் ஆசா பாசங்களையும், அவலங்களையும் இந்த நாடகம் சித்தரிக்கிறது. ஈழநாடு பரிசு பெற்ற நான்கு நாடக பிரதிகளும் 'விடிய இன்று நேரமிருக்கு ...' எனும் புத்தகமாக ஜனவரி 1971 ஆம் ஆண்டு ஈழநாடு வெளியீடாக வந்தது.

**செம்பியன் செல்வன் படைப்புகள்**

சர்ப்பவியூகம் – சிறுகதைத்தொகுதி, அமைதியின் இறகுகள் (சிறுகதைகள்), குறுங்கதைகள் நூறு (குறுங்கதைகள்), கானகத்தின் கானம் – நாவல், நெருப்பு மல்லிகை (நாவல்), விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (நாவல்), மூன்று முழு நிலவுகள் (நாடகம்), ஈழத்துச் சிறுகதை மணிகள் (விமர்சனம்), நாணலின் கீதை (தத்துவம்).

**மண் வாசனை வீசிடும் நாவலாசிரியர்**

செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை' என்ற நாவலும் மிக உன்னத படைப்பாகும். இந்த நாவல் அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் ஆகும். வீரகேசரியின் 73 ஆவது பிரசுரமாக நவம்பர் 1981 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த நாவலின் கருவூலத்தைப் பற்றி அவர் குறிப்புரையில் 'பிரதேச நாவல்களில் கிராமியம் சார்ந்தவை ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறியில் இயங்கும் தன்மைய தனித்துவமானவை.

'நெருப்பு மல்லிகை' நாவல் வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில், 81 நாவல்களிடையே கலாநிதி பொன். பூலோகசிங்கம், இ.இரத்தினம், மு. பொன்னம்பலம் ஆகியோரால் ஏகமனதாக முதலா வதாகத் தெரிய வருகிறது. அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் என இரட்டை முதல் பரிசு பெற்றது இந்த நாவல்.

போர்க்கால சூழலில் விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' எனும் நாவலை செம்பியன் செல்வன் ஈழமுரசில் தொடராக எழுதிவந்தார். இது 300 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக் காரணமாக 'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' நாவலின் அச்சான பிரதிகள் அழிந்து போயின.

'நிழல்கள்' 1963 ஆம் ஆண்டுகளில் சுதந்திரனில் செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய தொடர்தான் 'நிழல்கள்'. இந்த இருவரும் இணைந்து எழுதிய 'நிழல்கள்' யாழ்ப்பாண சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப் போராட்டங்களைச் சுவையாகச் சித்தரிக்கும் நாவல், செங்கை ஆழியான் எழுதிய அத்தியாயங்கள் சுவைப் படக் கதையைச் சொல்லி நகர்த்துவனவாக அமையும். செம்பியன் செல்வனின் அத்தியாயங்கள் கருத்துக் களைச் சொரிந்து நாவலின் இறுக்கத்தினைப் பேணியுள்ளன. மேலும் செம்பியன் செல்வன் 'நேரங்கள்' 'கர்ப்பக்கிரகம்'ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார்.

**வரலாறு படைத்த இதழாசிரியர்**

செம்பியன் செல்வன் இதழியியல் துறையிலும் ஈடுபட்டு, அதில் வெற்றியும் கண்டுள்ளார். 1964 – 1970 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 'விவேகி' சஞ்சிகையின் இணை ஆசிரியராக இருந் துள்ளார்.

1966 களில் இருந்து வெளிவரத் தொடங்கிய விவேகி குறுகிய காலத்தில் ஆற்றியுள்ள பணிகள் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவை. விவேகி மற்றும் அமிர்த கங்கை ஆகியவை இவருடைய ஆசிரியத்துவத்தில் வெளிவந்து வரலாறு படைத்த இதழ்கள். ஈழத்தமிழ் சிறுகதை மணிகள் இவர் பதிப்பித்த நமது சிறுகதை முன்னோடிகள் பற்றிய வரலாற்று

தொடர்ச்சி▼

# செம்பியன் செல்வன் எனும் இராஜகோபால் ஈழத்தின் தலை சிறந்த சிறுகதை சிற்பி!

தொடர்ச்சி▲

ஆய்வு நூலாகும்.

புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர் விவேகி சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். விவேகி 1970களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இது தரமான இலக்கியபடைப்புக்களை வெளியிட்டது.

ஈழமுரசு தினசரியின் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையாக 'அமிர்த கங்கை' 1986 ஆம் ஆண்டு வெளிவந்தது. 'அமிர்தகங்கை 12 இதழ்களே வெளிவந்தது. ஆனால் இந்த இலக்கிய சஞ்சிகை இன்றும் இலக்கிய உலகில் பேசப்படுகின்ற தரமுடைய தாக இருக்கிறது.

இந்தச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் செம்பியன் செல்வன். இங்கு இவரது பணி ஒரு இலக்கிய சஞ்சிகை எப்படித் தரமுடையதாக வெளியிட வேண்டும் என்பதை இதழியல் உலகுக்கு எடுத்துக்காட்டாய் இருந்தமையே ஆகும்.

அமிர்த கங்கை இதழ் யாழ்பாணத்தில் இருந்து 80 களின் நடுப்பகுதியில் வெளிவந்தது. அமிர்த கங்கை ஆசிரியராக செம்பிய செல்வன் விளங்கினார். சிறுகதை, கவிதை, கட்டுரை, செங்கை ஆழியான் இந்த தொடர் நாவல், வாசகர் கடிதங்கள், நகைசுவை துணுக்குகள் இதில் வெளியாகின.

### கல்வி பணியில் செம்பியன் செல்வன்

ஒரு புவியியல் பட்டதாரியாக பல்கலைக்கழகத்தி லிருந்து வெளியேறிய செம்பியன் செல்வன் திரு கோணமலை சென் ஜோசப் கல்லூரியிலும் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்திலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அதன்பின்னர் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூ ரியின் அதிபராக சிலகாலம் பணியாற்றிய பின் யாழ்ப் பாணம் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவியேற்று ஓய்வு பெறும்வரை கல்வி அதிகாரியாகப் பணியாற் றினார். தனது தனிப்பட்ட வாழ்வில் இவர் ஆசிரியராக, அதிபராகக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

1963 ஆம் ஆண்டு ஈழத்தின் சிறந்த சிறுகதை ஆசிரியர்களை கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம், தமிழறிஞர் கா.பொ.இரத்தினம் அவர்களுக்குக் கொண்டு விருது ஆடை போர்த்திக் கௌரவித்தபோது செம்பியன் செல்வனும் கௌரவிக்கப்பட்டார்.

அப்போது அவருக்கு வயது இருபது ஆகும். 2003 ஆம் ஆண்டு இவர் தனது மணிவிழாவைக் கொண்டாடிய போது யாழ். கத்தோலிக்க கலைஇலக்கிய வட்டம் 'இலக்கிய வித்தகர்' என்னும் பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தது.

### வாடைக்காற்று திரைப்படம்

வீரகேசரி வெளியீடான செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலை மூலக் கதையாகக் கொண்டு, அவரது அனுமதியுடன் செம்பியன் செல்வன் திரைக் கதை உரையாடல் எழுத்துப் பிரதியை தயாரித்தார். இந்த எழுத்துப் பிரதியை பின்னர் திரைப்படமாக தயாரித்தனர்.

செங்கை ஆழியான் எழுதிய வாடைக் காற்று திரைப்படமான பொழுது, அதற்கான திரைக்கதை, வசனங்களை எழுதிய செம்பியன் செல்வன் இலங்கை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஈழத்திரைப்பட வரலாற்றிலேயே முதன்முறையாக 'ஏ' தரமுடையதாகத் தெரிந்து 1.84,000 ரூபா மானியம் வழங்கியது. இவர் தொடர்ந்தும் ஈழத்திரைப்படக் குறும்படங்களிலும், அவை தொடர்பான வழிகாட்டல் விரிவுரைகளிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார்.

ஈழத்து நவீன இலக்கிய உலகின் ஈடிணையற்ற இலக்கியவாதியாகத் திகழ்ந்த நாட்டுப் பற்றாளர் செம்பியன் செல்வன் மே 20, 2005 இல் காலமானார். ஈழத்தின் இன்றைய படைப்பாளர்களுள் செம்பியன் செல்வன் மிகவும் வெற்றிகரமான காத்திரமான இலக்கிய முத்திரையை பதித்துள்ளார் என்பது உண்மையே.

# உயர் தொழில்நுட்ப மாணவர்களால் கௌரவிக்கப்பட்டார் தௌபீக் எம்.பி.

(கே. எ. ஹமீட் )

திருகோணமலை உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தி னால் திருகோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் கைக் கௌரவிக்கும் நிகழ்வும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை (17) நடைபெற்றன.

இந்த நிகழ்வில் திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பா ளர் ஏ.கே கோகிலன், விரிவுரையா ளர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

அண்மையில் திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் எச். என்.டி., ஐ.ரி. கற்கைநெறி இடைநிறுத்தப்



பட்டுள்ளதை மாணவர்கள் நாடாளு மன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததை அடுத்து உரியத ரப்பினருடன் பேசி அதற்கான தீர்வை நாடாளுமன்ற உறுப்பினர் பெற்றுக் கொடுத்தார்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் வகை யில் இந்தப் பாராட்டு இடம்பெற்றது.





# நுவரெலியாவில் இரண்டு நாள்கள் நடைபெற்ற மக்கள் நடமாடும் சேவை

(பொகவந்தலாவ)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நுவரெலியாவில் இரண்டு நாள்கள் மக்கள் நடமாடும் சேவை இடம்பெற்றது.

நுவரெலியாவுக்கு மாதிரி சிமாட் எதிர்காலம் எனும் தொனிப் பொருளில் இந்த மக்கள் நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டது.

மாநகர சபை சினி சிட்டா மைதான மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கர, நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோருடன் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்கா, சீ.பீ. ரத்நாயக்க உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கலை, கலாச்சார நிகழ்வு மற்றும் பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொழில் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இலங்கை மத்திய வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம், தொழிற் பயிற்சி நிலையங்கள், தேசிய தொழிலாளர் கற்கை



நிறுவனம், தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் ஆகியவற்றுடன், அரச வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், அனுமதி பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள், சிறு தொழில் அபிவிருத்தி பிரிவு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ள கூடிய சேவைகள் என 12 சேவைகள் தொடர்பில் இங்கு இடம்பெற்றன.

இதில் பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக இளைஞர் யுவதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு தமது தேவைகளை இலவசமாக பெற்று கொண்டனர்.



# இரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு கல்முனையில் சைக்கிள் ஓட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக உயர் இரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்கள் அமைப்பான 'ஸஹிரியன் 90' அமைப்பினரின் விழிப்புணர்வு சைக்கிள் பவனி அண்மையில் இடம் பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலை முன்றலில் இருந்து ஆரம்பமான சைக்கிள் சவாரி கல்முனை- அம்பாறை நெடுஞ்சாலை வழியாக காரைதீவு, மாவடிப்பள்ளி வழியாக சம்மாந்துறையைச் சென்றடைந்து மீண்டும் சாய்ந்த மருதை வந்தடைந்தது.



# ஒந்தாச்சிமட மாணவர்களுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து உதவி!

ஆஸ்திரேலியாவில் வாழும் ஒந்தாச்சிமடம் பழைய மாணவர்களால் ஒந்தாச்சிமடம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் பயிலும் சகல மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் (17) வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி மதிவதனி பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.துவிதரன் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நன்கொடை அதிதியாக நன்கொடையாளர் சார்பாக ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த பிரபல சமூக சேவையாளர், பழைய மாணவர் ரி.சௌந்தரராஜன், திருமதி றோஜினி சௌந்தரராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி அ.சற்குணராஜா, மற்றும் ஆசிரியர் முத்தையா ஜெயாதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி வழங்கிய அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு இடம்பெற்றது.

சாதனை படைத்த மாணவர்களுக்கு விசேட பரிசுப்பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தக் கல்வி ஊக்குவிப்பு உதவித் திட்டத்துக்கு ஒன்பது லட்சம் ரூபா நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# கல்முனையில் முஸ்லிம் காங்கிரஸ் கிராம மட்ட கிளைகள் புனரமைப்பு

**(ஏயெஸ் மௌலானா, கே. எ. ஹமீட்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை 05, 06 மற்றும் 07 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான கிளை புனரமைப்புக் கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை (18) தொழிலதிபர் பி.ரி.அப்துல் மஜீத் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்டக் குழுவின் செயலாளரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிய நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.



# கல்முனை ஆஸ்பத்திரியில் சிற்பத் திரை நீக்க விழா!

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வரலாற்று நிகழ்வுகளை தாங்கிய சிற்பத் திரை நீக்க விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரங்க சந்திரசேன தலைமையில் கடந்த புதன்கிழமை (15) இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமாகிய டாக்டர் இரா.முரளீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த வரலாற்று நிகழ்வுகளைத் தாங்கிய சிற்பத்தின் நிர்மாணத்துக்கான அனுசரணையை கல்முனை சரவணாஸ் ஜுவலறி உரிமையாளர் க.பிரகலதன் வழங்கி இருந்தார்.



இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.



# தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் ஆண்டு விழா!

(பழுவூரான்)

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புல னற்றோர் பாடசாலையின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று சனிக் கிழமை (18) பாடசாலை பிரதான மண்ட பத்தில் இடம்பெற்றது.

தரிசனம் விழிப்புலனற்றோர் பாட சாலை அதிபர் நாகராஜா இதயராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் ஆன்மீக அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன் பிரதம விருந்தினராகவும், கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கெனடி கௌரவ விருந்தினராகவும், அக்கரைப் பற்று இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை ஆசிரியையும், தரிசனம் விழிப்புலனற் றோர் பாடசாலையின் முன்னாள் மாணவியுமான திருமதி புஸ்பலோஜினி உமாகாந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது தரிசனம் விழிப்புல னற்றோர் பாடசாலை மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களின் வாத்திய இசை, கவிதை, பாடல், நடனம் ஆகிய நிகழ்வுகள் அரங்கேறின.

இந்த நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டீனா முரளிதரன், விபு லானந்தா அழகியற் கற்கைகள் நிறு வகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோ ரன்ஸ் பாரதி கெனடி மற்றும் ஆசிரியை திருமதி புஸ்பலோஜினி உமாகாந்தன் ஆகியோர் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.



# அந்நூர் பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடத்துக்கு அடிக்கல்!

## முஷாரப் எம்.பி.யின் நிதியில் அமைப்பு

(ஏயெஸ் மௌலானா)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மாவடிப்பள்ளி அந்நூர் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு உப பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி. ராஜகுலேந்திரன், மாவடிப்பள்ளி ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் அப்துல் மனாப் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது பள்ளிவாசல் பேஷ் இமாம் எம். பாரிஸ் மௌலவி விசேட துஆப் பிரார்த்தனையை மேற்கொண் டார்.

மாவடிப்பள்ளி அந்நூர் பாலர் பாட சாலைக்கென கட்டடம் ஒன்று அமைக் கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அதன் நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் பின் இணைப்பாளர் அஸாம் அப்துல் அஸீஸ் மௌலவி மேற்கொண்ட முயற்சியின் பயனாக அவர் இக்கட்ட நிர்மாணத்துக்காகத் தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதியில் இருந்து 10 லட்சம் ரூபாவை முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொத்துவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

(பாறுக் ஷிஹான்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆகியோரின் பங்கேற்புடன் புதன்கிழமை (15) பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வைத்திய அத்தியட்சகர் ஏ.பி.மசூத், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், வைத்திய அதிகாரிகளான டாக்டர் எம்.எம்.எம்.றஹீம், டாக்டர் எஸ்.எச்.எம்.யசீர், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு தலைவர் டாக்டர் எப்.எம்.உவைஸ் உள்ளிட்ட அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



வைத்தியசாலைக்கு உரிய திட்டங்கள் தயாரித்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்களுக்கான விடுதி வசதிகள் குறித்தும் வைத்தியசாலைக்கு மேலதிக காணியினைப் பெற்றுக்கொள்ளல், வைத்திய நிபுணர்களை நியமித்தல் மற்றும் ஏனைய ஆளணி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள், நோயாளர் விடுதிகளுக்குத் தேவையான மெத்தைகள் என்பன நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிராந்திய பணிப்பாளர் ஆகியோரால் வைத்திய அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டன.





# மட்டு. விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தில் ஓவியக் கண்காட்சி!

(பழுவூரான்)

கிழக்கு பல்கலைக்கழக கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக கட்புலத்துறை 3 ஆம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் சிரேஷ்ட விரிவுரையாளர் வி.கோகுலரமணனின் வழிகாட்டலின் கீழ் எண்ணெய் ஓவியக் கண்காட்சி வியாழக்கிழமை (16) வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி பாரதி புலோரன்ஸ் கெனடி ஓவியக் கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார்.

கண்காட்சியானது வியாழக்கிழமை (16) தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அத்தோடு தினமும் காலை 08 மணி முதல் மாலை 05 மணிவரை கண்காட்சியைப் பார்வையிட முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.









# வீட்டில் இருந்தே வாக்களித்த இந்திய மூத்த தலைவர்கள்

டில்லியில் உள்ள 7 மக்களவை தொகுதிகளில் வரும் எதிர்வரும் 25 ஆம் தேதி 6 ஆம் கட்ட மக்களவை தேர்தல் நடைபெறுகிறது. இதில் மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 5 ஆயிரத்து 406 பேர் வீட்டில் இருந்தே வாக்களிக்கும் வசதியை பயன்படுத்த '12 பி' படிவத்தை தாக்கல் செய்திருந்தனர்.

இவர்களுக்கான வாக்குப் பதிவை டில்லி தலைமை தேர்தல் அதிகாரி கடந்த 16 ஆம் திகதி தொடங்கி வைத்தார். எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இவர்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்க முடியும். முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் புதுடில்லி தொகுதியிலில் நேற்று முன்தினம் தங்கள் வீட்டிலிருந்தே வாக்களித்தனர்.

முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் முகமது ஹமீத் அன்சாரி கடந்த 16 ஆம திகதி வாக்களித்தார். முன்னாள் துணைப் பிரதமர் அத்வானி நேற்று வாக்காளித்தார்.

முதல் நாளில் 1482 பேர் வீட்டிலிருந்து வாக்காளித்தனர். 2 ஆம் நாளில் 1409 பேர் வாக்களித்தனர். மேற்கு டெல்லி தொகுதியில் அதிகபட்சமாக 348 வாக்காளர்கள் வீட்டிலிருந்தே வாக்களித்துள்ளனர்.

# சேவை பெறும் உரிமைச் சட்டத்தை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்

## வலியுறுத்துகிறார் இராமதாஸ்



அடுத்த மாத இறுதியில் கூட இருக்கும் தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடரில் சேவை பெறும் உரிமைச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத்தில் மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் உள்ளிட்ட அரசின் சேவைகளைப் பெற மிக அதிக அளவில் கையூட்டு வழங்க வேண்டியிருப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். வாக்களித்த மக்களுக்கு பொதுச் சேவை வழங்கும் அடிப்படைக் கடமையை நிறைவேற்றுவதில் கூட தமிழக அரசு படுதோல்வி அடைந்து விட்டது என்பதைத் தான் பொதுமக்களின் குற்றச்சாட்டு உறுதி செய்திருக்கிறது.

தமிழக மக்களுக்குத் தேவையான சாதிச் சான்று, பிறப்புச் சான்று, இறப்புச் சான்று, வசிப்பிட சான்றிதழ், வருவாய் சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பட்டா மாறுதல், திருமணப் பதிவுச் சான்று, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, நில ஆவணங்களின் நகல்கள், மின் இணைப்பு, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்குதல் ஆகிய சேவைகளை வழங்க வேண்டியது வருவாய்த்துறை, உள்ளாட்சித் துறை உள்ளிட்ட தமிழக அரசுத் துறைகளின் பணி ஆகும். ஆனால், தவிர்க்கக் கூடாத இந்த சேவைகளைக் கூட தமிழக அரசின் துறைகள் சரியான நேரத்தில் வழங்குவதில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் அத்தியாவசியச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அடிப்படைச் சேவைகளை பெறுவதற்கு குறைந்தது ரூ.500 முதல் ரூ.10,000 வரை கையூட்டாக வழங்க வேண்டியிருப்பதாகவும், கையூட்டு கொடுத்தாலும் கூட குறித்த காலத்தில் சான்றிதழ்கள் கிடைப்பதில்லை என்றும் பொதுமக்கள் வெளிப்படையாக குற்றஞ்சாட்டியுள்ளனர். பொது மக்களுக்குத் தேவையான பல சான்றிதழ்களை பொது சேவை மையம் மூலமாகவே விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் அரசு அலுவலகங்களுக்கு நேரில் செல்லத் தேவையில்லை என்று அரசு விதிகள் கூறுகின்றன. ஆனால், பொது சேவை மையம் வாயிலாக விண்ணப்பித்தாலும் கூட அரசு அலுவலகங்களுக்கு நேரில் சென்று கையூட்டு தர வேண்டியுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர். கையூட்டு கொடுத்தால் தான் சேவை கிடைக்கும் என்பது அரசுக்கு அவமானம்.

அரசு அலுவலகங்களில் மக்களுக்கான சேவைகள் அனைத்தும் குறித்த நேரத்தில் கையூட்டு இல்லாமல் வழங்கப்படுகிறது என்று தமிழக அரசால் கூற முடியாது.

மக்களுக்கு அனைத்து சேவைகளும் குறித்த காலத்தில் கிடைப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். அதற்காக அடுத்த மாத இறுதியில் கூட இருக்கும் தமிழக சட்டப்பேரவையின் கூட்டத் தொடரில் சேவை பெறும் உரிமைச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.- என்றார்.

பக்கங்கள் - 6
கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 19/05/2024

## வரிச்சலுகை வழங்குமாறு பொலியேவ் வலியுறுத்தல்



கனடிய மக்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட வேண்டுமென அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் பியோ

C3▶



# இலங்கையில் மனித உரிமைகளுக்காக கனடா தொடர்ந்து பலமாகக் குரல் தரும்

## இனப்படுகொலை நினைவேந்தல் செய்தியில் பிரதமர் ட்ரூடோ

ஒன்ராரியோ,மே 19

இலங்கையில் மனித உரிமைகளுக்காக கனடா பலமாகக் குரல் கொடுப்பதாக கனேடியப் பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

மே 18ஆம் திகதி தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு பிரதமர் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'இலங்கையில் கால் நூற்றாண்டு காலம் நீடித்த ஆயுதப் போர் பதினைந்து வருடங்களுக்கு முன்பு முடிவுக்கு வந்தது. முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்டவற்றில் பல பத்தாயிரம் தமிழர்கள் அவலமாக உயிரிழந்தார்கள். இன்று வரை மேலும் பலர் காணாமற்போயோ, காயமடைந்தோ அல்லது இடம்பெயர்க்கப்பட்டோ உள்ளார்கள். அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட நீடித்திருக்கும் வலியுடன் வாழும் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது அன்புக்குரியவர்கள் ஆகியோரை நாம் இன்று கௌரவிக்கிறோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு கனேடிய நாடாளுமன்றம் மே 18 ஆந் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஒருமனதாக அங்கீகரித்தது. போரின்போது புரியப்பட்ட குற்றங்களுக்கும், இலங்கையில் அனைவரும் எதிர்கொண்ட துன்பங்களுக்கும், நீதி கிடைப்பதற்கும் பொறுப்புக்கூறப்படுவதற்கும் நாம் எப்போதும் குரல்கொடுப்போம்.

முன்னாள் இலங்கை அரச அதிகாரிகள் நான்கு பேர் மீது, ஆயுதப் போரின்போது அவர்கள் இலங்கையில் புரிந்த மனித உரிமை மீறல்களுக்காக 2023 ஆம் ஆண்டில் நாம் தடைகளை விதித்தோம்.

இலங்கையில்மனித உரிமைகளுக்குக் கனடா பலமாகக் குரல் கொடுக்கிறது.

C3▶

# இனப்படுகொலைக் குற்றவாளிகளை தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## கனடா அரசிடம் கனடியத் தமிழர் பேரவை கோரிக்கை

ஒன்ராரியோ, மே 19

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அப்பால் சென்று இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இனப்படுகொலை என்று உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து, இந்த கொடூரமான குற்றங்களுக்கு காரணமானவர்களை தண்டிக்க முயற்சி செய்ய வேண்டும் என்று கனேடிய அரசாங்கத்தை வலியுறுத்துவதாக கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

'தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாள் – நீதியை நோக்கி 15 வருடங்கள்' என்ற அறிக்கையில் கனடியத் தமிழர் பேரவை இவ்வாறு தெரிவித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

'மே 18ஆம் தேதி தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தின் 15 ஆண்டுகள் நிறைவடைகிறது.

C3▶

# சுதந்திரமடைந்தது முதல் இலங்கை இனப்படுகொலைப் பாதையில்தான்!

ஒன்ராரியோ, மே 19

சுதந்திரமடைந்தது முதல் இலங்கை அரசாங்கமானது இனப்படுகொலையை நோக்கிய பாதையில் சென்று கொண்டிருப்பதாக ஒன்ராரியோ மாகாண உறுப்பினரும், இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் அமைச்சர் தணிகாசலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

‘இன்று மே 18 தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. எங்கள் அன்புக்குரியவர்களின் நினைவை நாங்கள் மதிக்கிறோம். இழந்த அப்பாவி உயிர்கள் மற்றும் அவர்களின் கதைகளுக்கும் நெகிழ்ச்சிக்கும் நாங்கள் சாட்சியாக



இருக்கிறோம்.

சுதந்திரம் அடைந்ததில் இருந்து, இலங்கை அரசு இனப்படுகொலையை நோக்கிய பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இலங்கை அரசு திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் உரிமையை மறுதலிக்க ஆரம்பித்தது – இறுதியில் தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கு வழிவகுக்கும் தொடர் நிகழ்வுகளை ஆரம்பித்தது.

மே 2009 என்பது தமிழ் இனப்படுகொலையின் உச்சமாக குறிக்கப்படுகிறது. கொத்துக் குண்டுத் தாக்குதல்கள், கடத்தல்கள், வல்லுறவுகள், கொலைகள், முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்து மறுப்பு போன்றவற்றுடன் இனப்படுகொலையின் உச்சகட்ட வேலைத்திட்டத்தில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இழந்த உயிர்களை மீட்டெடுக்க முடியாது என்றாலும், அடுத்த சந்ததியினருக்கு துன்பம் பற்றிக் கற்றுக் கொடுத்து, தமிழ் மக்களுக்கு நீதியையும் சுதந்திரத்தையும் பெற்றுத் தருவதற்கான நமது உறுதிப்பாட்டை நாம் மீண்டும் உறுதிப்படுத்த முடியும்.’ – என்று அதில் கூறப்பட்டுள்ளது.





# புலம்பெயர் பணியாளர்களினுடைய எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ள கனடா அரசின் நடைமுறை

கனடா அரசின் ஒரு நடைமுறை, புலம்பெயர் பணியாளர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

கனடாவில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிப்போரை, அவர்களுடைய வயது, கல்வி, ஆங்கிலப் புலமை மற்றும் பணி அனுபவம் போன்ற காரணிகளை வைத்துத் தரவரிசைப்படுத்தும் நடைமுறையே CRS என்னும் நடைமுறை.

இரண்டு வாரங்களுக்கொருமுறை, கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு, CRS தரவரிசையை வெளியிடுகிறது. அது வெளியிட்டுள்ள புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி அட்டையைப் பெறுவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு நிர்ணயித்த ஊசுளு புள்ளிகள் 540 மற்றும் அதற்கும் அதிகம். மூன்று ஆண்டுகள் நீடிக்கும் post-graduate work perஅவை (PGWP) வைத்திருக்கும் பெரும்பாலானவர்கள் இந்த புள்ளியை எட்ட தகுதிபெறவில்லை என்கிறார் புலம்பெயர்தல் ஆலோசகரான ஆயெ-யெ புரிவய.

மார்க் மில்லர் புலம்பெயர்தல் அமைச்சரானதைத் தொடர்ந்து, 2023இல் காலாவதியாகும் அனுமதிகள் நீட்டிக்கப்படாது என்று கூறியிருந்தார் அவர். அப்படிப்பட்ட சூழலில் இப்படி ஒரு உயர் ஊசுளு புள்ளி வரம்பு நியமிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான பணியாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்கிறார் ஆயயெ புரிவய.

இந்தியாவிலிருந்து 2020ஆம் ஆண்டு கல்வி கற்க கனடாவுக்கு வந்தவர் கனிகா மஹேஷ்வரி (29). படித்து முடித்து, நகைத்தொழில் ஒன்று துவங்கவேண்டும் என்பது அவரது கனவு.

அதற்கு சம்பந்தமே இல்லாத ஓர் அலுவலகத்தில் வேலை செய்துவரும் மஹேஷ்வரி, வர்த்தகம் செய்யும் தனது கணவருடன் இணைந்து நகைக்கடை திறப்பதற்காக பணம் சேமித்துவருகிறார்கள்.

ஆனால், ஒகஸ்ட் மாதத்தில் அவரது பணி உரிமம் காலாவதியாக உள்ளது. உயர் ஊசுளு புள்ளி வரம்பு நியமிக்கப்பட்டுள்ளதால், நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ள அவருக்கு இதுவரை எந்த அழைப்பும் வரவில்லை. அவர் பெற்றுள்ள புள்ளிகள், அந்த வரம்பை எட்ட முடியாத தூரத்தில் உள்ளன.

ஆகவே, தனது கனவு கலையும் நிலையில் உள்ளது தனக்கு தெளிவாகப் புரிவதாக தெரிவிக்கிறார் மஹேஷ்வரி.

நான் மீண்டும் இந்தியாவுக்கே திரும்பவேண்டும் என்றால், நான்கு ஆண்டுகளாக நான் செய்த வேலை, செலவு எல்லாம் வீணாகிப்போகும், எனக்கு மட்டுமல்ல, என் உதவியை எதிர்பார்த்திருக்கும் என் மொத்தக் குடும்பத்துக்கும் அது பெரும் இழப்பு என்கிறார் மஹேஷ்வரி.

# நீதி, பொறுப்புக் கூறலுக்கு கனடா தொடர்ந்து அழுத்தம்

## அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு



ஒன்ராரியோ, மே 19

இலங்கையிலும், உலகம் முழுவதிலும் முன்னெடுக்கப்பட்ட அட்டூழியங்களுக்கான நீதி மற்றும் பொறுப்புடைமையை நோக்கி கனடா தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் தொடர்பில் தமது சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலையை அங்கீகரித்தல் அல்லது பொறுப்புடைமை மற்றும் நீதியை நோக்கிய பாதை என்பது பிரிந்து முன்னெடுக்கப்பட வேண்டியசெயல் அல்ல எனவும், அது அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டிய ஒன்று எனவும், தமிழர்கள் அனைவரும் இந்த முயற்சியில் ஒன்றிணைய வேண்டும் எனவும் தாம் நம்புவதாகவும் அமைச்சர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

---

### இனப்படுகொலை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடியத் தமிழர் பேரவை, தமிழ்-கனடியர்கள் மற்றும் உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்தோருடன் இணைந்து, 2009இல் இலங்கையில் ஆயுதப் போரின் இறுதி நாள்களில் அப்பாவி தமிழ் பொதுமக்களின் துயரமான இழப்புகளை நினைவுகூருகிறது.

இறுதி நாள்களில் முள்ளிவாய்க்கால் கரையில் பல்லாயிரக்கணக்கானோர் கொடூரமாக கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கானோர் இலங்கை ஆயுதப்படைகளால் இடம்பெயர்ந்தனர். ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி, 2009 இறப்பு எண்ணிக்கை 40,000 முதல் 75,000 வரை இருந்தது. மற்ற மதிப்பீடுகள் 140,000 க்கும் அதிகமாக இருப்பதாகக் கூறுகின்றன.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழ்-கனடியர்களும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களும், இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறலையும் நீதியையும் கோருகின்றனர். புலம்பெயர்ந்த தமிழர்கள் வளர்ந்து வரும் நிலையில், இந்த நிகழ்வுகள் இனப்படுகொலை என்று சர்வதேச அங்கீகாரமும் புரிதலும் ஏற்பட்டுள்ளது.

மே 18ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரிப்பதற்காக நாடாளுமன்றத்தில் ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றப்பட்டமை உட்பட இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தது சந்தேகத்திற்கு இடமின்றி இனப்படுகொலைதான் என்ற அங்கீகாரம் அதிகரித்து வருகிறது. சுதந்திரம் அடைந்ததில் இருந்து இலங்கைத் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்பதில் சந்தேகமில்லை.

பொது சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அப்பால் சென்று இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இனப்படுகொலை என்று உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து, இந்த கொடூரமான குற்றங்களுக்கு காரணமானவர்களைத் தண்டிக்க முயற்சி செய்ய வேண்டும் என்று கனேடிய அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் நீதியைத் தவிர்ப்பதைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் கனடா உள்ளிட்ட அதன் உறுப்பு நாடுகளை கனடியத் தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது. கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சர்வதேச பொறிமுறையின் மூலமும் இந்த குற்றவாளிகளை தண்டிக்க நாடுகளை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

உண்மையான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை அடைவது தமிழர்களின் எதிர்கால சந்ததியினரின் நலம் மற்றும் செழுமைக்கு இன்றியமையாதது என்று கனடியத் தமிழர் பேரவை உறுதியாக நம்புகிறது.

மே 18 அன்று, முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் நினைவுகளை உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகம் அஞ்சலி செலுத்தும் வேளையில், தமிழ்-கனடியர்கள் உலகளாவிய தமிழ் சமூகத்துடன் ஒற்றுமையாக நின்று, விழிப்புணர்வை ஏற்படுத்தி, நீதியைப் பெறுவதற்கான உறுதிப்பாட்டைப் பேணுகிறார்கள்.' - என்று உள்ளது.

### சரிச்சலுகை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலியேவ் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக எரிபொருளுக்கு இவ்வாறு வரிச் சலுகை வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல், லிபரல் அரசாங்கத்தின் வரிக் கொள்கை குறித்து பொலியேவ் கேள்வி எழுப்பி வருகின்றார்.

மத்திய அரசாங்கத்தின் எரிபொருள் கட்டணங்கள் தொடர்பில் அவர் அண்மையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய அரசாங்கத்தினால் அறவீடு செய்யப்படும் கார்பன் வரியை ரத்து செய்ய வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

குறிப்பாக பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களுக்கு இவ்வாறு வரிச் சலுகை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

கனடிய மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் விடுமுறையை கழிப்பதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### இலங்கையில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் அதிகமான மீளிணக்கம், நீதி, பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றைக் கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2022ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். நீடித்திருக்கும் அமைதியைக் கட்டியெழுப்பத் தேவையான அடிப்படை அம்சங்களான மதம், நம்பிக்கை, பன்மையியல் ஆகியவற்றின் சுதந்திரத்தை மதித்து நடக்குமாறு நாம் இலங்கை அரசைத் தொடர்ந்து கோருகிறோம்.

சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாதவைகளான - மனித உரிமைகள், நீதி, பொறுப்புக் கூறல் ஆகியவற்றுக்காக - குரல் கொடுக்கவேண்டிய எமது கூட்டுப் பொறுப்பை இந்த நாள் எமக்கு நினைவுபடுத்துகிறது.

உலகெங்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பணியைக் கனடா ஒருபோதும் நிறுத்தமாட்டாது. இலங்கையில் ஆயுதப் போரின்போது பாதிக்கப்பட்டவர்களை கௌரவிப்பதற்கு இணையுமாறு கனேடிய அரசின் சார்பாக நான் கனேடியர்களை அழைக்கிறேன். மேம்பட்டதும், அனைவரையும் அதிகம் உள்ளடக்கியதும், மேலும் அமைதியானதுமாக உலகை எவ்வாறு மாற்றலாமென நாம் ஒன்றுசேர்ந்து சிந்திப்போம்.' - என்று உள்ளது.

# உண்மைகளையும் குற்றவாளிகளையும் கண்டறிய ஒரே வழி சர்வதேச சுயாதீன விசாரணை மட்டுமே!

## கனடியத் தமிழர் தேசிய அவை வலியுறுத்திக் கூறுகிறது

ஒன்ராரியோ, மே 19

தமிழ் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதியை நிவர்த்தி செய்வதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க இலங்கை விரும்பவில்லை என்பதன் அர்த்தம், உண்மைகளை கண்டறிவதற்கும் குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கும் ஒரே வழி, தமிழ் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கை கொண்ட சர்வதேச சுயாதீன விசாரணை மற்றும் வழக்குத் தொடரும் பொறிமுறையை நிறுவுவதே ஆகும் என கனடியத் தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது.

தமிழ் இனப்படுகொலை நினைவு நாளில் கனடியத் தமிழர் தேசிய அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'இன்று, மே 18, 2024, தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்வதற்கு உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் ஒன்று கூடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் மே 18ஆம் திகதி தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தில், 1948ஆம் ஆண்டு தொடக்கம் மே 2009 இல் இலங்கையின் முள்ளிவாய்க்காலில் தமிழ் இனப்படுகொலையின் உச்சக்கட்டங்கள் உட்பட, இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையின் விளைவாக இழந்த அனைத்து தமிழ் மக்களின் உயிர்களையும் நினைவுகூருகிறோம்.

1948 ஆம் ஆண்டு முதல், இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், தமிழ் இனத்தின் கலாசாரம், மொழி, வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் அடையாளம் உள்ளிட்ட பண்புகளை அழித்து, அவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கத்துடன், அரச அனுசரணையுடன் திட்டமிட்ட செயற்பாடுகள் உட்பட பல்வேறு தமிழ் இனப்படுகொலை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

தமிழ் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் எவரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலையில் அவர்களின் பங்கு இருந்தபோதிலும், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் பதவி உயர்வு பெற்றதன் மூலம் தண்டனையிலிருந்து விடுபடும் நிலை தொடர்கிறது. ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக இன்றும் தொடர்கின்ற தமிழ் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதி இல்லாததால் இலங்கையில் நம்பிக்கை இல்லை.

தமிழ் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதியை நிவர்த்தி செய்வதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க இலங்கை விரும்பவில்லை என்பதன் அர்த்தம், உண்மைகளை கண்டறிவதற்கும் குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கும் ஒரே வழி, தமிழ் இனப்படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையும் உறுதியும் கொண்ட சர்வதேச சுயாதீன விசாரணை மற்றும் வழக்குத் தொடரும் பொறிமுறையை நிறுவுவதே ஆகும்.




கடந்த 15 வருடங்களில், தமிழ் இனப்படுகொலைக்கான அங்கீகாரம், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை அடைவதிலும், தமிழ் இனப்படுகொலை மறுப்பு மற்றும் திரிப்புகளை எதிர்த்துப் போராடுவதிலும் கனடாவின் பல்வேறு மட்ட அரசாங்கங்கள் முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளன.

தமிழ் இனப்படுகொலையே நடந்தது என அங்கீகரித்து, கனடாவில் பல்வேறு காலகட்டங்களில் அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் இருந்து ஆரம்பித்து, ஒன்றாறியோ சட்டமன்றம் சட்டமூலம் 104 - தமிழ் இனப்படுகொலை கல்வி வாரச் சட்டத்தை நிறைவேற்றியது, கனடாவின் நாடாளுமன்றம் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரித்துள்ளது. இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட நான்கு இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக கனடா தடைகளை விதித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை பொறுப்புக்கூற வைக்கும் ஒரு முக்கிய குழு உறுப்பினராக கனடா தொடர்ந்து முக்கிய பங்கை வகிக்கிறது மற்றும் பிராம்ப்டன் நகரம் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் அமைப்பதற்கான பிரேரணையை நிறைவேற்றியுள்ளது.

மேலும், கனேடிய அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள், தமிழ் மக்களுடனான தமது ஒற்றுமையை வெளிப்படுத்தும் மற்றும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கான தமது அக்கறைகளை வெளிப்படுத்தும் பல பொது அறிக்கைகளை பல்வேறு நேரங்களில் வெளியிட்டுள்ளனர்.

இந்த நேரத்தில், தமிழ் கனடியர்கள் என்ற வகையில், கடந்த 15 ஆண்டுகளில் பல்வேறு துயரங்கள் மற்றும் நெகிழ்ச்சியான காலங்களில் தமிழ் மக்களுடன் தோளோடு தோளாகப் பங்கேற்று, கனடாவில் உள்ள அனைத்து அரசாங்க மட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், கடந்த 15 ஆண்டுகளில், கனடாவிலும், உலக அளவிலும், தமிழ் இனப்படுகொலைக்கான அங்கீகாரம், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை அடைவதிலும், தமிழ் இனப்படுகொலை மறுப்பு மற்றும் சிதைவை எதிர்த்துப் போராடுவதிலும் பல்வேறு சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் அமைப்புகள் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இந்த நேரத்தில், தமிழ் கனடியர்கள் என்ற வகையில், கடந்த 15 வருடங்களில் தமிழ் மக்களுடன் துக்கத்திலும், நெகிழ்ச்சியிலும் ஒற்றுமையாக இருந்த அனைத்து சிவில் சமூக உறுப்பினர்களுக்கும் அமைப்புகளுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ச்சி▼

# உண்மைகளையும் குற்றவாளிகளையும் கண்டறிய ஒரே வழி சர்வதேச சுயாதீன விசாரணை மட்டுமே!

**தொடர்ச்சி▲**

தமிழ் கனடியர்கள் என்ற வகையில், தமிழ் இனப்படுகொலை, சட்டமூலம் 104 - தமிழ் இனப்படுகொலை கல்வி வாரச் சட்டம், தமிழ் இனப்படுகொலை நினைவு தினம் மற்றும் தமிழ் இனப்படுகொலை மறுப்பு மற்றும் திரிப்புகளை எதிர்த்துப் போராடும் அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளை அங்கீகரித்ததற்காக ஒன்ராறியோவில் உள்ள பாடசாலை சபைகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எவ்வாறாயினும், இலங்கைத் தீவில் உள்ள தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை நிவர்த்தி செய்ய தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச அங்கீகாரம், சர்வதேச பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதியை அடைவதற்கான தமிழ் மக்களின் பயணம் இன்னும் தொடர்கிறது.

மறுபுறம், இலங்கை அரசின் அனுசரணையுடன் கண்காணிப்பு, மிரட்டல், துன்புறுத்தல், கைது, வன்முறை, பௌத்தமயமாக்கல், குடியேற்றம், இராணுவமயமாக்கல், சிங்களமயமாக்கல் போன்ற பல்வேறு தமிழ் இனப்படுகொலைகள் மூலம் தமிழ் மக்கள் மீதான கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நில அபகரிப்புகள். இலங்கைத் தீவில் தமிழ் மக்களைத் தொடர்ந்து அடிபணியச் செய்வதற்கு இவ்வாறான செயல்களும் ஏனைய செயல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இன்றும் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்று வரும் கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையானது, அவர்கள் ஒன்று கூடுவதற்கும், இழந்த தமிழ் மக்களின் வாழ்வை நினைவு கூருவதற்குமான உரிமைகள் மறுக்கப்படும் நிலையை எட்டியுள்ளது. இக்காலத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை (அரிசியும் தண்ணீரும் கலந்த கஞ்சி) பொதுவெளியில் உட்கொள்வது கூட தமிழ் மக்களின் மற்றும் இழந்த தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை நினைவுகூர்ந்து கௌரவிப்பதற்காக மறுக்கப்படுகிறது.

கனடாவில் உள்ள அனைத்து அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட அனைத்து அதிகாரிகளும், கனடா மற்றும் உலகளவில் உள்ள அனைத்து சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் அமைப்புகளும் தமிழ் மக்களுடன் தங்கள் வலுவான குரலுடனும் வாதத்துடனும் தொடர்ந்து ஒன்றாக நிற்க வேண்டும் என்று நாங்கள் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஆணையகத்தின் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் அலுவலகம் உட்பட சர்வதேச முயற்சிகள் தமிழ் இனப்படுகொலையின் உச்சக்கட்டத்திலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட, சாட்சியங்களை சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் போன்றவற்றில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் இன்னும் நிவாரண நீதிக்காக காத்திருக்கிறார்கள், இது அவசர உணர்வை கட்டாயப்படுத்துகிறது.

எனவே, தமிழ் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் நீதியை நழுவ விடாமல் தடுக்க, தமிழ் இனப்படுகொலைக்கான பரிகார நீதி மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறலை அடைவதற்கான செயல்முறைகளை விரைவுபடுத்தவும், வலுப்படுத்தவும், கனடா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஒரு தலைப்பட்சமாகவும் பலதரப்பு ரீதியாகவும் நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் இவ்வேளையில், தமிழ் இனப்படுகொலை மறுப்பு மற்றும் திரிப்புகளுக்கு எதிராக தொடர்ந்து போராடி, சர்வதேச அங்கீகாரம், சர்வதேச பொறுப்புக்கூறல் மற்றும் தமிழ் இனப்படுகொலைக்கான தீர்வு நீதி மற்றும் நிரந்தர அரசியல் தீர்வுக்காக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இலங்கைத் தீவில் உள்ள தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்காக பாடுபடுவோம்.' - என்று உள்ளது.

# கனடாவின் சுகாதார அமைச்சரின் அலுவலகத்திலும் நினைவேந்தல்

தமிழினப்படுகொலை நினைவேந்தல்கள் தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் கனடாவின் சுகாதார அமைச்சரான மார்க் ஹொலண்ட்டினாளின் அலுவகத்திலும் இறுதி யுத்தத்தில் உயிரிழந்த தாயக உறவுகளுக்கு நினைவஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சரே தனது எக்ஸ் தள கணக்கில் பதிவொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் "தமிழ் இனப்படுகொலை நினைவு நாளில், முள்ளிவாய்க்கால் மற்றும் இலங்கையில் ஆயுதப் போரினால் பாதிக்கப்பட்டவர்களைக் கௌரவிப்பதோடு, கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகங்களுடன் இந்த அர்த்தமற்ற வன்முறையின் தாக்கத்துடன் தொடர்ந்து வாழ்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார்.



அத்துடன், இறுதி போரில் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒன்றிணையுமாறு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரோடோவும் அறிக்கையொன்றை வெளியிட்டு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டொராண்டோவில் தமிழின அழிப்பு நாள் நினைவேந்தல்















